IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சோழர்களின் சமயமும் இறை வழிபாடும்

நெறியாளர்

**முனைவர் சு. செல்வகுமாரன்**
இணைப் பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**க. சபாநாயகம்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தில் இருந்து வேந்தர்களில் இறைப்பணி மற்றும் சமுதாயப் பணி, சமயப் பணி பெருந்தொகையை செலவிட்டு மக்களுக்கு வாழ்வியலில் அறத்தை மற்றும் இறையருளைப் போதித்த சோழ மன்னர்களில் சமயமும் இறைவழிபாடும் இவ்வாய்வக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** கங்காபுரம், புதினம், சோழர்கள் வழிபாடு, சிவபக்தி, சமயக் கொள்கை, வரலாறு

**முன்னுரை**

தமிழக வரலாற்றில் சோழர்களின் வரலாற்றுக்கு எத்தனையோ முகங்கள் இருக்கின்றன. தமிழ் அரசர்களின் உச்சபட்ச வெற்றியாளர்களாகவும், நானூறு ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட ஆட்சியில் தமிழக வரலாற்றின் ஒளிபொருந்திய ஆட்சியாளர்களாகவும் அறியப்பட்டிருக்கிறார்கள் . அன்றைய வாழ்க்கைக்குள் கோயிலும், வழிபாடும், கடவுள்களும், திருவிழாக்களும், பண்டிகைகளும் ஒப்பீட்டளவில் அதிகமாகவே இருந்துள்ளன. சைவமும் கலைகளும் பக்தி இலக்கியங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந்திருக்கின்றன. சோழ அரசர்கள் எல்லோரும் இறைநெறியில் நிற்பவர்கள். எம்பெருமானின் மேல் பற்றும், புதுப்புது ஆலயங்கள் கட்டுவதும், விதவிதமான வழிபாட்டு முறைகளில் வழிபாடு நடத்தி மகிழ்வதும் விருப்பமான செயலாகும்.

உயிர்களைப் படைத்துக் காத்து அருளும் இறைவனின் இயல்பை மக்களால் முற்றாக அறிய இயலாது. உயிர்கள் அடையும் இன்ப துன்பங்கள், உயர்வு தாழ்வு, பெருமை சிறுமை, ஏற்ற இறக்கம் ஆகியவற்றை மட்டுமே அறியும் நாம், நம்மை இயக்குகின்ற ஓர் ஆற்றல் இருப்பதை மட்டுமே உணர முடிகின்றது. இந்நிலையே கடவுள் நம்பிக்கைக்கு அடிப்படையாகும். இத்தகையதான இறை நம்பிக்கையைச் சோழர்கள் தம் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு நடைமுறைப் படுத்தினர் என்பதை ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**சமயமும் சமுதாயமும்**

சமயம் என்பது இறைவழிபாடு, சமய உணர்வு, சமுதாயம், ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். தனிமனித வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற்கு உதவுவதில் சமயமும் ஒன்றாகும். உலகில் சமயங்கள் இறைவனை மூலமாகக் கொண்டே எழுகின்றது. சமயத் தோற்றம் அச்சத்தின் காரணமாக எழுந்த புனிதமான உணர்வின் அடிப்படையில் உண்டானதாகக் கொள்ளலாம்.

"பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுதல்"[1]

கலித்தொகை நூலின் அடிப்படையில் பார்க்கிறபோது மனிதனின் பண்பட்ட உள்ளத்தின் வாயிலாக இறை உணர்வினை அறிய, திருக்கோயில்கள், வழிபாட்டின் தத்துவங்கள், சமயக் கோட்பாடுகள், மனிதப் பண்பாடுகளை அறிய முடியும். தமிழர் தம் பனர்பாடும் ஒருமைப்பாட்டு உணர்வும் என்றும் மங்காது நிலவப் பெருந்துணை புரிபவைகளாகக் கோயில்களும் அங்கு நடைபெறும் விழாக்களுமாகும்.

பழந்தமிழரின் வழிபாட்டுமுறை என்பது அச்சம், வியப்பு ஆகியவற்றின் நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றிய காலத்திற்கு ஏற்றவாறு சற்று மாறுபட்ட வளர்ச்சியடைந்த நிலையில் அவ்வழிபாடு அமையக் காணலாம்.

**கங்காபுரத்தில் வேதம் குறித்த பதிவுகள்**

"இறைவனுக்கு நான்கு வேதங்களைக் குறிக்கிறது என்று நான்கு குதிரை பூட்டியதேர், உடலின் ஆறு பதினாறு அங்கங்களைக் குறிக்கிறது என்று ஆறு வட கயிறு, அறுபத்து நான்கு கலைகளைக் குறிக்கிறது என்று தேருக்கு அறுபத்து நான்கு மரகதத் தோரணங்கள்"[2] எனக் கங்காபுரம் புதினத்தில் இயற்கைக்கு ஈடான கருத்துக்களையே ஆசிரியர் உரைத்துள்ளார்.

சிந்துவெளியில் செதுக்கப்படாத, செதுக்கப்பட்ட சிற்பங்களுடைய கந்தகக்கற்களும் காணப்படுகின்றன. தன்னைப் படைத்த கடவுள் தன்னைப் போலவே இருப்பான் எனத் தமிழன்

நினைத்தான். விவிலியம் கூட, தனது சாயலாகவே மாந்தனைக் கடவுள் படைத்ததாகக் கூறுகின்றது. தன்னைப் போலவே கடவுளுக்கும் மனைவி, மக்கள், சுற்றம், வேலைக்காரர்கள், போர் வீரர்கள் என்றவாறு இருந்தனர் என்பது மாந்தனின் கற்பனை. அனைத்தையும் தரும் கடவுள், செல்வனாகவும், ஆற்றல் மிக்கவனாகவும் என விண்ணுலகம் என்ற கடவுள் வாழும் இடத்தை உணர்ந்து கொண்டான்.

“தில்லையம்பலத்தில் சிவபெருமானைப் பார்க்கும் போது உலகத்தின் இயக்கம் புரியும். நான்கு திசைகளையும் ஆட்கொள்பவன் இறைவன், என் திசைகளையும் காப்பபன் இறைவன் என்ற பொருளில் இறைவனின் கைகளை நான்காக, எட்டாகப் படைக்கிறார்கள். மனிதர்களைவிட வேறுபட்ட உருவம் கொண்டிருந்தால் தான் மனிதர்கள் கடவுளையே கவனிப்பார்கள்”[3] என கங்காபுரம் புதினத்தில் கடவுள் உருவம் மனித உருவத்தை அமைத்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

கோயில்கள் சமுதாய மையங்கள் என்பர் சான்றோர்கள். மனிதன் நாகரிகம் பெறத் தொடங்கிய போதே கோயில் வழிபாடு தொடங்கப் பெற்று விட்டது. மனிதர்களை ஒன்று சேர்க்க, முறையான வாழ்க்கையினை வாழச் செய்யத் திருக்கோயில்களும் தெய்வ வழிபாடுகளும் தேவையானது. மனித வாழ்வில் கோயிலும், வழிபாடும் குறிப்பிட்ட இடத்தைப் பெற்று மனித மனம் அமைதியடைய அவரவர் மனத்திற்கேற்ற உருவ வழிபாடும், உளத்திற்குச் சாந்தி தரும் வகையில் அமைந்துள்ளது.

“கோயிலை நிர்வகிப்போர் பெருமானின் முன் இறைவனால் மகுடம் சூட்டப்பட்ட சண்டேசுரர் அமர்ந்திருக்கும் பணிவுடனும் பயத்துடனும் நிர்வாக ஸ்ரீ காரிய அதிகாரிகள் காரியங்களைச் செய்ய வேண்டும். வரவு செலவு கணக்கில் வெளிப்படைத் தன்மையைக் காட்ட வேண்டும். இவ்வுண்மையை இச்சிலைகளைப் பார்க்கும் குடிகள் மனத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். கோயிலின் மண்டபத்தில் ஒரு கல்லை நகர்த்தினால் முழு மண்டபமும் வீழ்வதைப் போல், கோயிலின் நிர்வாகத்தில் எழும் சிறு தவறும் நம் சாம் ராஜ்யத்தையே தகர்த்துவிடும்”[4] என்பதைக் கங்காபுரம் புதினம் விளக்குகிறது.

**விழாக்கள்**

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும் மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் ஊட்டுவன விழாக்கள். மனித இனத்தை ஒன்றுபடுத்தி மகிழ்ச்சியில் திளைக்க வைப்பதே விழாக்களின் முக்கிய நோக்கமாகும். மக்களிடையே சமய நெறிகளைப் பரப்பிடவும் மக்களின் மனங்களைத் தூய்மை செய்து, அதன் மூலம் இறைவனது பெருமைகளைப் புலப்படுத்திடவும், கோயில்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. விழாக்களில் ஆண்டு விழாக்கள், மாதவிழாக்கள், நாட்பூசைகள் குறிப்பிடத்தக்கன.

"மனிதன் தனக்கு மீறிய ஆற்றல் வாய்ந்த சக்தி ஒன்று இருப்பதாகக் கருதுகின்றான். அந்தச் சக்தியே தன் வாழ்விலும் தம்மையொத்த மாந்தர்கள் வாழ்விலும் ஏற்படும் நன்மை தீமைகளுக்குக் காரணமாக அமைகின்றது என்றும் நம்புகின்றான். தன்னால் இயலாத செயல் முடிவடையும்போது நன்றியோடும், தன்னால் இயலாத போது அதிலிருந்து விடுபடுவதற்காகவும் அச்சக்தியினை இறைவன் என்று கருதி வழிபடுகிறான்."[5]

**இறைநெறியும் - கடவுலும்**

நம் சோழ அரசர்கள் எல்லோரும் இறைநெறியில் நிற்பவர்கள். பெருமானின் மேல் பற்று கொண்டவர்கள். பெருமானுக்குப் புதுப்புது ஆலயங்கள் கட்டுவதும், விதவிதமான வழிபாட்டு முறைகளில் வழிபாடு நடத்தி மகிழ்வதும் அவர்களுக்கு விருப்பமான செயலாக இருந்தமையும் எனக் கங்காபுரம் புதினம் வழியாகச் சோழர்கள் சிவ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பது தெரிகிறது.

மக்கள், ஊர் நன்மை கருதி, ஊர்த் தெய்வங்களை ஆண்டுதோறும் வழிபட்டுவந்தனர். சங்க காலந்தொட்டு தமிழகத்தில் கோயில்கள் மன்னர்களாலும், மக்களாலும் கட்டி வழிபடப்பட்டு வருகின்றன. தொடக்கத்தில் அழியத்தக்க பொருட்களால் கட்டப்பட்ட கோயில்கள் பின்னாளில் கற்கோயில்களாகப் பரிணமித்தன. அவற்றில் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள் , கட்டுமானக் கோயில்கள் எனக் கோயில்கள் தமிழ் மண்ணைக் கண்ட பல்லவர், பாண்டியர், சோழர் எனப் பேரரசர்களும், அதியர், முத்தரையர், இருக்குவெளிர் என வேளிர் மரபினரும் தமிழகத்தில்பல கோயில்களைக் கட்டியுள்ளனர்.

போர்க்களத்தின் வெற்றியைப் புகழ்மாலையாகக் கவிதையில் மட்டும் வடித்து வைத்தால், அவ்வரிகள் செல்லரித்துப் போகக்கூடும். கற்றளி ஆக்கிவிட்டால் காலத்திற்கும் நிற்கும் என்று அரசனின் நிலையாப் புகழுக்கு வித்திடுகிறான். கங்காபுரம் வழியாக இராசேந்திர சோழன் கற்கோயிலாக மாற்றினான் என்ற செய்தி தெரிய வருகின்றன.

**கடவுள்**

கடவுளால் உலகம் படைக்கப்பபட்டது. உலக உயிரினங்களுக்கு வாழ்க்கை அருளப்படுவதும், காக்கப்படுவதும், அழிக்கப்படுவதும் கடவுள் செய்த விதி வழியாகவே நிகழ்கின்றன. கடவுள் ஒருவரே, அவரை அடைகின்ற வழி முறைகள் தாம் வெவ்வேறு.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' எனும் சங்க இலக்கியத்தில் புறநானூற்றுப் பாடலின் வழியில் எம்பெருமான் யாரையும் எதற்காகவும் தண்டிப்பதில்லை, அவரவர் செயலே அவரவரின் பலன் என்பதையும் உணரமுடிகிறது. கங்காபுரம் புதினத்தின் வழியாகவும் மனிதன் செய்யும் செயல்கள் தான் அவர்களுக்குப் பலனாக அமைகின்றன எனனும் கருத்தினையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

கடவுள் என்பதற்கு 'எல்லாவற்றையும் கடந்தவர்' 'எனப் பொருள் கூறலாம். எவற்றின் உள்ளும் கடந்து நிற்பவர் எனவும், எல்லா அண்டங்களையும் இயக்குகின்றவர் என்பதும் பொருளாகிறது.

> "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது."[6]

அனைத்து நலன்களும் கிட்ட முயல வேண்டும் எனபது வள்ளுவர் வாக்காக அமைவது கவனத்திற்குரியது.

**மதம்**

உலகம் எப்பொழுது தோன்றிற்றோ மனிதன் எப்பொழுது தோன்றினானோ அப்பொழுதே மதமும் தோன்றிவிட்டது. மதம் என்ற சொல்லுக்கு 'மதி-அறிவு- மதித்தல்- ஆராய்தல்-அளவிடுதல்-சம்மதம்' 'என்று பொருள் கொள்ளலாம்.

**இயற்கையும் கடவுளும்**

பஞ்சபூதங்கள் எனக் குறிப்பிடப்பெறும் நிலம், நீர், தீ காற்று வான் ஆகியவற்றை வணங்கலாயினர் என்பதை,

> "நீரும் நிலனும் நீயும் வளியும்
> மாசு விசும்பொடு ஐந்து உடன் இயற்றிய
> மழுவாள நெடியோன் தலைவன்" [7]

எனும் மதுரைக் காஞ்சித் தொடர் உணர்த்துகின்றது.

ஒளி வடிவே முழுமுதற்கடவுளாகக் கண்ட பண்டைத் தமிழர் அக்கடவுளின் அருள் வடிவை

வைத்து வழிபடுவதற்கு அமைத்த திருக்கோயில்களாகும். பகற் காலத்தே பேரொளிப் பிழம்பாய்த் துலங்காநின்ற கதிரவனையே கடவுளாகக் கருதி வழிபட்டு வரலாயினர். பகலவனுக்கு உயிரான சிவபிரானை வழிபட்டார்கள்.

சோழ அரசர்களின் ராஜகுரு சர்வசிவ பண்டிதர். உயிர்களைத் தழைக்கச் செய்யும் ஆதியும் அந்தமுமான நெருப்புக் கடவுளே, நீயே இந்த வாழ்வின் ஆதாரம் என்றபடி நின்ற இடத்தில் சர்வாங்கமும் தரையில்பட சூரியக் கடவுளை வணங்கினார். எனும் பதிவு கடவுளை வணங்குவது சோழர்களின் ஆட்சியில் எவ்வாறு இருந்திருக்கின்றது என்று எடுத்துக்காட்டாக பார்க்கமுடிகிறது. அவனை எட்டாத் தொலைவில் வைத்து வழிபட ஒளிவுருவினை தமக்கெதிரே நிறுத்தி சிறப்புகளைச் செய்து மலர்மாலை சூட்டி காலடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள்.

“உலகம் உவப்ப உலகளர்பு திரிதரு
மலர் புகழ் ஞாயிறு கடற்கணர்டா அங்கு
ஓவற இமைக்கும் செண்விளிங்க கவிரொளி”[8]

எனக் காலை ஒளியை இறைவனின் வழிபடக் கருங்கல்லில் அமைத்தற்குப் புகுந்தார்கள். அந்தத் திருவுருவே பிற்காலத்தில் சிவலிங்கம் என்றுணர்தல் வேண்டும்.

**சைவ சமயம்**

இந்து மதத்தின் ஒரு பிரிவான சைவம் சோழர்கள் காலத்தில் உச்சி நிலையை அடைந்து இருந்தது. சைவத்தில் சாக்தர், காளாமுகர், ஹுணர்கள் முதலிய பிரிவுகள் அங்கங்கு நிலைத்துத் தத்தம் பணிகளை ஆற்றிவந்தனர். இந்து சமயத்தில் மும்மூர்த்திகள் தத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றாலும், சிவனே முழுமுதல் கடவுளாகக் கொள்ளப்பட்டார்.

“தமிழகத்துச் சைவத்திற்கு வட இந்திய சைவத்திற்கும் இடையே நெருங்கித் தொடர்பு இருந்தது. அதற்கு சான்றுகள் பல இருந்தன. நடராஜ தத்துவம் சோழர்காலத்தில் சிற்பத்திலும், ஒவியத்திலும் வடிக்கப்பட்டது. வடமொழி ஆகமங்கள் தமிழகத்தில் பரவியதன் காரணமாகச் சைவ சமயம் புது மலர்ச்சி பெற்றது.”[9]

சிவலிங்கமே இயற்கையின் மாபெரும் தத்துவத்தின் வடிவம் தானே? லிங்கம் ஆண்குறி, லிங்கம் பொருத்தப்படும் ஆவுடை, பெண்ணின் குறி. ஆணும் பெண்ணும் இணைந்திருக்கும் காட்சியைத்தான் நாம் வழிபடுகிறோம். சிவன் கோயிலின் உண்ணாழிகையிலும் வடித்திருக்கிறோம்.

சதுரமாக, வட்டமாக, நீர்வட்டமாக என்று ஆவுடையார் இருந்தாலும், தாமரை ஆவுடையாருக்குப் பொருத்தமாக அமைந்துவிட்டது. பெனர்களின் மென்மை, குளிர்ச்சி, ஆண்களைத் தாங்கி நிற்கும் ஆளுமை இவையனைத்தின் குறியீடாகவும் தாமரை பொருந்திப் போனதால், சிற்பிகள் பத்மபீடத்தின் மேல் லிங்கத்தை உருவாக்கத் தொடங்கி விட்டார்கள். எனக் கங்காபுரம் புதினம் வழியாக நடராஜரின் வழிபாட்டுத் தத்துவத்தை உணர்த்துகிறது.

**சோழர்கள் வளர்த்த தமிழ்**

சமயக் குரவர்கள் தம் பாடல்களின் மூலம் சைவ வழிபாட்டையும், நடராஜ தத்துவத்தையும் நாடறியப் பரப்பினார்கள். அவர்களுடைய மெய்ப்பொருட்களைத் தனியே திரட்டி சைவம், சமயம், சாதி, இன, குல பேதங்களைக்களையும் சமயமாகும், மனிதனால் செய்ய முடிந்த அறங்களையே வலியுறுத்தும் பின்பற்றுவதற்கு எளிய, நன்னெறிகாட்டும் தூய சமயமாக சைவ சமயம் விளங்கிற்று.

“சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என செய்வீர்?
பாத்திரம் சிவம் என்று பணிந்திரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே”[10]

என விளக்கியுள்ளார்.

சைவ இலக்கியங்கள் என்னும் போதே சைவத் திருமுறைகள் முதற்களா் வைத்துச் சைவ வரலாற்றைக் காண்பதால் சைவ வரலாறு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகள் பழமையானது. சைவ இலக்கியங்களில் தோற்றக் காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு என்று நாட்டுப் பிரிவுகள் இருந்து வந்தன. சைவ இலக்கியங்கள் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பல்லவ வேந்தர் சிறப்பு நிலையில் இருந்து ஆட்சி செய்தனர். அவர்களுடைய ஆட்சி, நம் சைவத் திருமுறைக் காலத்தில், பெரும்பாலும் தொண்டை நாட்டிலும், சிறுபான்மை, சோழ பாண்டிய நாடுகளிலும் பரந்திருந்தது. ஆகவே, திருமுறைகள் தோன்றுவதற்கிடமான இக்காலக் கட்டமாகிய கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டாகும்.”[11]

நம் நாட்டிலும் சமணமும், பௌத்தமும் வலுவானதாக இருந்த நிலை பல்லவர்களின் காலத்திற்குப் பிறகு மாறிவிட்டது. சைவமே நம்முடைய நெறியாகி இருந்ததையும் புதினம் வழியாகப் பல்லவ காலத்தின் சைவ நெறியை றிய முடிகின்றன. நாம் கடவுளுடனே ஒன்றி

இருக்கின்றோம். வேறாகத் தனித்து நிற்கவில்லை என்பதுதான் தமிழர்களின் சமயச்சாரம்.

“சீவனெனச் சீவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாயிட்டிருப்பரே”[12]

எனும் கருத்துக் குறிக்கத்தக்கது.

நம்முடைய பெருங்கோயில்களில் இறைவனின் திருவுருவத்தை மட்டும் பெரிய சிலை வடிவில் வடிக்கிறோம்? உண்ணாழிசையில் மூலவராக்கி வணங்குகிறோம். பல கோயில்களில் ஆவுடையார் மேலுள்ள லிங்கம் மட்டுமே வழிபாட்டிற்கு உள்ளது. என்பதும் குறிப்பிடதக்கது.

**சமயம்**

சமயம் என்பதற்குச் 'சமை'என்பது பகுதி. உடம்பை வளர்ப்பதற்கு உணவுப்பொருள்களைச் சமைப்பது போல இறைவனை அுவதற்கு கரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப்படுத்துவது ஆகும்.

“உலகில் தோன்றியுள்ள பல சமயங்களும் மக்களிடம் அன்பு, அருள், அறம் போன்றவற்றையே வலியுறுத்துகின்றன. அவற்றுள் தொன்மை வாய்ந்தது இந்து சமயமே என்றும் , சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவ சமயம் என்றும் போற்றப்படுகின்றன.”[13]

உங்கள் புகழ், மேருவைப்போல் உயர்ந்தது அரசே உலகில் எம்பெருமானின் புகழே மேருவிற்கு நிகர். நாமெல்லோரும் அவனின் அரசாட்சியின் கீழ் இருப்பவர்களே என்ற கங்காபுரம் புதினத்தின் செய்திகள் சைவசமயத்தின் முதற் கடவுளாகக் கூறுகின்றன.

சோழர்கள் சைவ சமயத்தையே பெரிதும் சார்ந்தும் வளர்த்தும் வந்தனர். பொதுவாகச் சோழர்களின் காலம் சைவ, சமயத்தின் பொற்காலம், சைவ சமயம் உச்ச நிலையில் இருந்த காலம்.

**துறவிகள்**

“சோழர் காலத்தில் துறவிகளும் துறவு மனப்பான்மையும் மதிக்கப்பட்டது. துறவிகளுக்கு உணவளிப்பது சிறந்த தருமமாகவும், தங்களது கடமையாகவும் மக்கள் கருதினர். சைவம், வைணவம் இரண்டிலும் இந்தக் கருத்துக் காணப்பட்டது. உத்தரமேருரில் குந்தவை மடம் போன்ற மடங்கள் இருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.”[14] சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள் இரண்டு பிரிவுகளாக இருந்தனர். சித்தாந்த சைவம் நீங்கலாகக் கபாலிகர்கள், காளமுகர்கள் போன்ற சிவ பக்தர்களும் இருந்தனர்.

**காளா முகர்கள்**

காளாமுகர்கள் அல்லது மகாவிரதிகள் என்பவர்கள் சைவ சமயத்திலேயே மிகவும் கடுமையானவர்களாக இருந்தார்கள். இவர்களுக்கும் காபாலிகர்களுக்கும் அவ்வளவாக வேற்றுமை இல்லை.

உட்கார்ந்த மேனியாகக் கடவுளை வழிபடுவது. இந்தப் பழக்கங்களை அவர்கள் கடுமையாகக் கடைபிடித்ததால் அவர்களுக்கும் கபாலிகர்கள் என்று பெயர்.

பௌத்த பிக்குகள் பிறர்பொருளை எடுக்கக் கூடாது, பொய் பேசக்கூடாது, காம விழைவு கூடாது, உயிரைக் கொல்லக் கூடாது, குறித்த காலந்தவறி உணவு உண்ணக்கூடாது என்பன பௌத்த மதக் கட்டளைகள். "என்னுடைய மண்டையைப் பாருங்கள்? உங்களின் காபாலம் போலவே இருக்கிறது" என்று சோழர்களின் காலத்தில் காளாமுகர்கள் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தார்கள்.

**சிவ அடியார்கள்**

சிவயோகி என்பவர் குடும்பம் மற்றும் பொருள் பந்தங்களில் இருந்து விடுபட வாழ்நாள் முழுவதும் சிவனைத் தியானிப்பவராக இருந்தனர். தம் வாழ்நாளில் இறுதி காலத்தில் திருநீற்றிற்குள் அழுந்திச் சிவ மந்திரங்களை ஒதி, மார்பில் தொங்கும் சிவலிங்கத்தை வழிபடுவர். மடங்களிலும், கோயில்களிலும் சிவயோகியர்களுக்கு உணவு படைக்க ஏற்பட்ட கட்டளைகள் பற்றிய கல்வெட்டுகள் ஏராளமாக உள்ளன. நடமாடும் சிவன் சர்வசிவ பண்டிதர், ஆடவல்லானின் தீவிரமான அடியாரான பண்டிதர் ஆடவல்லானுக்காக எவரையும் எதிர்க்கத் துணிந்தவர். நீங்கள் இருக்குமிடத்தில் தேடியிருக்க விரும்பி, சிவன் கோயிலிருந்து கிளம்பி உங்களோடு தங்குவதற்கு மதுராந்தகன் வந்துவிட்டார் என்ற பகுதி கங்காபுரம் புதினத்தின் சிவ அடியார்களைப் பற்றிய செய்தியினைப் பகிர்கிறது.

**முடிவுரை**

உலகில் மனித இனம் தோன்றிய காலத்திலேயே வழிபாடும் தோன்றியது எனில் அது மிகையாகாது. ஆதிமனிதர்கள் வணங்கத் தொடங்கிய தொடக்க நிலையையும் வழிபாட்டின் வளர்ச்சி நிலையினையும் நன்கு அறியமுடிகிறது. மேலும், மனிதனின் வழிபாட்டுத் தோற்றத்திற்கு அவனிடம் எழுந்த அச்சமே அடிப்படைக் காரணமாயிற்று என்பது விளங்குகிறது. வழிபாட்டு முறையில் காணப்படும் வேறுபாடுகள் நாடு, இனம் மற்றும் புவியியல் அமைப்பு என்பனவற்றைப் பொருத்தே அமைகின்றது என்பதும் புலனாகின்றது.

திருமாலடியார்கள் வைணவத்தை வளர்த்தனர். நாதமுனி வைணவ சித்தாந்தத்துக்கு விளக்கமளித்தார். இவர் ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்தார். இதனால் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களைத் தமிழகம் பெற்றது.

சமணமும் பௌத்தமும் சோழர்காலத்தில் தொடர்ந்திருந்தன. வேடல், செந்தலை, திருப்பான்மாலை ஆகியவை சமணர் இருக்கைகளாகத் தொடர்ந்தன. நாகப்பட்டினத்தில் பௌத்தர் விகாரை இருந்தது. இது சீனத்துத் தொடர்பு கொண்டதும் தென் கிழக்காசியா தொடர்புடையதுமாகும்.

சமயங்களை வளர்ப்பதில் ஆலயங்களுக்கு அடுத்த நிலையில் மடங்கள் இடம்பெற்றன. சோழ காலத்தில் துறவிகள் தங்கும் மடங்கள் பெருகின. துறவிகள் துறந்தோர்களாக இருந்த போது மடங்கள் துறவிகளைப் பேணவும் கல்வி, கலை ஆகியவற்றை ஊக்கப்படுத்தவும் பயன்பட்டன.

மடங்களும், குகைகளும் ஆலயங்களைச் சந்தித்திருந்தன. சோழர் காலத்தில் ஒவ்வொரு ஆலயமும் அதன் அத்த எல்லையில் பல மடங்களைப் பெற்றன.

சோழர் காலத்தில் கட்டுமானக் காலை படிப்படியாக மாறுதல்களைப் பெற்றது. கோயில் கட்டிடங்கள் முதலில் சிறிதாக இருந்தன. பின்னர் பிரமாண்டமான தோற்றம் கொண்டன. சோழர் காலத்துக் கோயில்கள் இராட்சச வடிவிலும் பொற்கொல்லர் கைவண்ணம் போன்று அமைந்தன என்றார் பெர்கூசண் என்பார். படையெடுப்புகள் வழி கவர்ந்த செல்வங்களும், கடின வரிகளும் வழங்கிய வருவாய் மூலமும், கட்டாயத ண்டங்களாளும் கட்டாய வேலைகளும் இத்தகைய பிரமாண்ட பணிகளுக்கு உதவின.

இந்து சமயம் ஆன்மீகத்தின் இறைவழிபாடு முறைகளைப் பல வழிகளில் வெளிப்படுத்துகின்றனர். ஒவ்வொரு மனிதரும் தனக்குப் பிடித்தமான வழியைத் தேர்ந்தெடுக்கவும் , அதைப் பின்பற்றவும் சுதந்திரம் உண்டு. வழிகள் பலவகை, ஆனால் அவை அனைத்தும் ஞானம், அல்லது உள்ளொளி, இறையன்பு, கர்ம வினை அல்லது நேரியவழி ஆகியன உணர்வுகளில் இறைவனைக் காணவும் அவரது இருப்பை உணரவும் உதவி செய்கின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. கலித்தொகை, பா. 133: 9.
2. அ.வெண்ணிலா, கங்காபுரம், ப. 96.
3. மேலது., ப. 406.
4. மேலது., ப. 402.
5. ந. ரெ.முத்துராஜன், ஐயனார் வழிபாடு, ப. 9.
6. திருக்குறள். 377.
7. மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, பா. வரி. 453, 455.
8. நக்கீரர், திருமுருகாற்றுப்படை, பா. 1.
9. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர் வரலாறு-II, ப. 358.
10. பானுமதி ரமேஷ், சைவம் வளர்த்த தமிழ், பக். 8.
11. ஔவை சு. நடராஜப்பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு, ப. 15.
12. திருமூலர், பா. 2017, பி. தர்மராசன், இறைவழிபாடு, ப. 278.
13. பானுமதி ரமேஷ், சைவம் வளர்த்த தமிழ், ப. 6.
14. டாக்டர். கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும், மக்களும், பண்பாடும், ப. 848.

**துணைநின்ற நூல்கள்**


1. அ. வெண்ணிலா, கங்காபுரம் (புதினம்), அகநி வெளியீடு, எண்.3, பாடசாலை வீதி, அம்மையப்பட்டு, வந்தவாசி-604 408, திருவண்ணாமலை மாவட்டம்.
2. டாக்டர், மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பூம்புகார் பதிப்பகம், 127, ப.எண். 63, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-600 108, இரண்டாம் பதிப்பு-ஆகஸ்ட், 2015
3. இரா. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், நாம் தமிழர் பதிப்பகம், பார்த்தசாரதி சாமி கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.
4. பானுமதி ரமேஷ், சைவம் வளர்த்த தமிழ், நியூ சென்சுரி புக் ஹவுஸ் 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098 பதிப்பு-2011.
5. டாக்டர் கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும், மக்களும், பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600 108, பதிப்பு-2014

6. ஒளவை சு. நடராஜப்பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு, பூம்புகார் பதிப்பகம், 127/63, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-600 108, பதிப்பு-2011
7. பொ.வே. சோமசுந்தரனார், திருமுருகாற்றுப்படை, கழக வெளியீடு, 522, டி.டி.கே. சாலை, சென்னை, 2000
8. ஒளவை ச. துரைசாமிப்பிள்ளை, கலித்தொகை, கழக வெளியீடு, 154, டி.டி.சே.சாலை, சென்னை, 1999
9. வ.சுப. மாணிக்கனார், திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108, மு.ப.-2000